Public Health England

NHS

# ஃப்ளுவில் இருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாத்தல்

## இங்கிலாந்தில் ஃப்ளு தடுப்புத்திறனூட்டல்

### பெற்றோர் & பேணுநர்களுக்கான தகவல்



HELP US HELP YOU
PROTECT AGAINST FLU

Flu immunisation
Helping to protect children, every winter

# 5 காரணங்கள்

## உங்கள் குழந்தைக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதற்கு

1. **உங்கள் குழந்தையைக் காத்திடுங்கள்**
தடுப்புமருந்து ஃப்ளு, பிரான்க்கைடிஸ், நிமோனியா போன்ற கடுமையான சிக்கல்களிலிருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாக்க உதவும்

2. **உங்களையும், உங்கள் குடும்பம் மற்றும் நண்பர்களையும் காத்திடுங்கள்**
உங்கள் குழந்தைக்குத் தடுப்பூசி போடுவதால் எதிர்ப்பு சக்தி குறைவாக உள்ள நண்பர்களையும் குடும்பத்தினரையும் பாதுகாத்திடலாம்

3. **ஊசி தேவையில்லை**
நாசியில் மருந்து தெளித்தல் வலியற்றது மற்றும் எளிதானது

4. **ஃப்ளுவுடன் அவதிப்படுவதை விடச் சிறந்தது**
நாசியில் தெளிக்கப்படும் மருந்து ஃப்ளுவில் இருந்து உங்களை காத்திடும். உலகம் முழுவதும் லட்சக்கணக்கான குழந்தைகளுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. மிகவும் பாதுகாப்பானது என்பதும் உறுதி செய்யப்பட்டுள்ளது.

5. **செலவுகளைக் குறைத்திடுங்கள்**
உங்கள் குழந்தைக்கு ஃப்ளு தொற்று ஏற்பட்டால், நீங்கள் விடுப்பு எடுக்க வேண்டியிருக்கும் அல்லது உங்கள் குழந்தையைக் கவனித்துக்கொள்ள மாற்று ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கும்





## ஒவ்வொரு ஆண்டும் இலவசமாக ஃப்ளு தடுப்புமருந்து வழங்கப்படுவது:

- இரண்டு அல்லது மூன்று வயதுடைய குழந்தைகளுக்கு (தற்போதைய ஃப்ளு பருவத்தில் ஆகஸ்டு 31 அன்று)
- தொடக்கப்பள்ளி வயதுடைய அனைத்து குழந்தைகளுக்கு
- 7 வயதான அனைத்து நடுநிலைப்பள்ளி குழந்தைகளுக்கு

மற்றும்:

- ஃப்ளு தொற்று ஏற்படும் அளவில் ஆரோக்கியச் சிக்கல்கள் கொண்ட குழந்தைகளுக்கு
- NHS ஷீல்டட் நோயாளிகள் பட்டியலில் உள்ளவர்களோடு வாழும் குழந்தைகளுக்கு

ஒவ்வொரு ஆண்டும் எந்தக் குழந்தைகள் தகுதியானவர்கள் என்பதைப் பற்றிய கூடுதல் தகவல்களை இங்கே காணலாம்: www.nhs.uk/child-flu

## என் குழந்தைக்கு ஏன் ஃப்ளு தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும்?

குழந்தைகளுக்கு ஃப்ளு தொற்று ஏற்பட்டால், காய்ச்சல், மூக்கடைப்பு, வறட்டு இருமல், தொண்டை வலி, மூட்டு & தசை வலி அதீத களைப்பு ஆகியவை உண்டாகலாம். இது பல நாட்களுக்கு நீடிக்கலாம்.

சில குழந்தைகளுக்கு காய்ச்சல் மிக அதிகமாக ஏற்படலாம், சில நேரங்களில் வழக்கமான ஃப்ளு அறிகுறிகள் இல்லாமலிருக்கலாம், அதனால் சிகிச்சைக்காக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படலாம். காதுகளில் தொற்று ஏற்படுதல், கடுமையான பிரான்க்கைடிஸ் மற்றும் நிமோனியா போன்றவை ஃப்ளு காரணமாக உண்டாகும் கடுமையான விளைவுகள்.

## தடுப்பு மருந்தின் நன்மைகள் யாவை?

உங்கள் குழந்தைக்குத் தடுப்பு மருந்து கொடுப்பதால், குழந்தைகளுக்கு வரும் மிக மோசமான நோய்களிலிருந்து அவர்களைப் பாதுகாக்க முடியும். ஃப்ளு காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்படுபவர்களில் ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை தான் அதிகமாக இருக்கிறது.

தடுப்பு மருந்துகள் மூலம் வீட்டில் உள்ள தாத்தா பாட்டிகள் அல்லது நீண்டகாலம் உடல்நலக் குறைவால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் போன்றோருக்கு உங்கள் குழந்தையிடமிருந்து ஃப்ளு பரவுவதற்கான வாய்ப்புகளைக் குறைக்க முடியும்.

இவ்வருடம், COVID-19 பரவி வரும் சூழலில், ஃப்ளுவில் இருந்து அவர்களைக் காப்பது மிக முக்கியம். காரணம் ஃப்ளு தொற்று ஏற்படும் அபாயம் உள்ளவர்களுக்கு COVID-19 பரவும் அபாயமும் உள்ளது.

நீங்கள் உடல்நலக் குறைவால் பாதிக்கப்படுவதால் அல்லது பாதிப்புக்கு உள்ளாகியுள்ள உங்கள் குழந்தையைக் கவனிக்க வேண்டியிருப்பதால் பணிக்கு விடுப்பு போடுவதையும் பிற செயல்களைச் செய்யாமல் இருப்பதையும் தவிர்க்க உதவும்.

## தடுப்பு மருந்து எந்த அளவுக்குப் பயனளிப்பதாக இருக்கிறது?

கணிக்க முடியாத இந்த வைரஸிற்கு எதிராக, நம்மிடம் உள்ள சிறந்த பாதுகாப்பு இந்த ஃப்ளு தடுப்பு மருந்து தான். தடுப்பு மருந்தில் உள்ள ப்ளுவின் உட்கூறு, மற்றும் அப்போது பரவும் ஃப்ளுவின் உட்கூறு, ஆகியவற்றின் இடையே உள்ள வேறுபாட்டின் காரணமாக வருடா வருடம் தடுப்பு மருந்தின் செயல்திறன் வேறுபடலாம். UK வில் குழந்தைகளுக்கு கொடுக்கப்படும் தடுப்பு மருந்து அதன் அறிமுகக் காலத்தில் இருந்து தேவையான பாதுகாப்பை ஃப்ளுவிற்கு எதிராக வழங்கி வருகிறது.

## ஏன் பல குழந்தைகளுக்குத் தடுப்பு மருந்து கொடுக்கப்படுகிறது?

தடுப்பு மருந்து கொடுத்து குழந்தைகள் பாதுகாக்கப்பட்டால், நோய் தொற்றும், பரவலும் குறைவாக இருக்கும். இதன் மூலம் மற்ற குடும்ப உறுப்பினர்களும் நண்பர்களும் பாதுகாக்கப்படுவர்.



ஃப்ளுவில் இருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாத்தல் – பெற்றோர் மற்றும் பேணுநர்களுக்கான தகவல்

## NHS ஷீல்டட் நோயாளிகள் பட்டியலில் உள்ளவர்களோடு வாழும் குழந்தைகளுக்கு இவ்வருடம் ஏன் ஃப்ளு தடுப்பு மருந்து வழங்கப்படுகிறது?

COVID-19 தொற்றுக்கு ஆட்படும் அபாயம் உள்ளவர்களை இந்த குளிர்காலத்தில் ஆரோக்கியமாக வைத்திருக்க விரும்புகிறோம், மேலும் அவர்களுக்கு ஃப்ளு ஏற்படாமலும் பாதுகாக்க விரும்புகிறோம். ஏற்கனவே உடல்நலக்கோளாறு உள்ளவர்களுக்கு ஃப்ளு தொற்று, அவர்கள் வீட்டில் உள்ளவர்கள் மூலம் ஏற்படாமல் தடுக்க, வீட்டில் உள்ள அனைவருக்கும் ஃப்ளு தடுப்பு மருந்து வழங்கப்படும். இதில் குழந்தைகளும் அடங்குவர்.

NHS ஷீல்டட் நோயாளிகள் பட்டியலில் உள்ளவர்களோடு உங்கள் குழந்தை வாழ நேரிட்டாலோ, அல்லது அவர்களோடு வசிப்பிடத்தை குளிர்காலத்தில் அதிக நாட்கள் பகிர்ந்து கொள்ளும் சூழல் இருந்தாலோ, அவர்களோடு தொடர்பு ஏற்படாது இருப்பது சாத்தியம் இல்லை என்றாலோ, அவர்களும் தடுப்பு மருந்து எடுக்க வேண்டும். பள்ளியில் தடுப்பு மருந்து வழங்கப்படும் குழுவில் அவர்கள் இல்லையென்றால், நீங்கள் உங்கள் ஜிபி சர்ஜரியை கேட்க வேண்டும்.

வீட்டில் உள்ள அந்த நபர் நோய் எதிர்ப்பு சக்தி மிகவும் குறைவாக உள்ள நபர் என்றால், ஜிபி பிராக்டீஸ் அவருக்கு நாசியில் தெளிக்கும் மருந்திற்குப் பதிலாக ஊசி போடலாம்.



## என் குழந்தைக்குச் சென்ற ஆண்டு ஃப்ளு தடுப்பு மருந்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டு மீண்டும் ஒரு முறை கொடுக்க வேண்டுமா?

ஆம்; ஃப்ளு வைரஸ்கள் ஒவ்வொரு ஆண்டும் மாறுகின்றன, எனவே தடுப்பு மருந்து புதுப்பிக்கப்பட்டிருக்கலாம். இதன் காரணமாக, சென்ற ஆண்டு தடுப்புமருந்து கொடுக்கப்பட்டிருந்தாலும், இந்த ஆண்டு மீண்டும் ஃப்ளு தடுப்பு மருந்து கொடுக்குமாறு பரிந்துரைக்கிறோம்.

## என் குழந்தைக்குத் தடுப்புமருந்து கொடுப்பவர் யார்?

இரண்டு மற்றும் மூன்று வயதுடைய குழந்தைக்குப் பயிற்சி செவிலியரால்* அவர்களது ஜிபியில் தடுப்புமருந்து கொடுக்கப்படும்.

கிட்டத்தட்ட அனைத்து பள்ளி வயதுடைய குழந்தைகளுக்கும் பள்ளியிலேயே தடுப்பு மருந்து கொடுக்கப்படும்.

வீட்டிலிருந்து பயிற்றுவிக்கப்படும் குழந்தைகளுக்கு, அவர்கள் தகுதியான வயதினராக இருந்தால் தடுப்பு மருந்து கொடுக்கப்படும். ஏற்பாடுகள் பற்றிய தகவல்களை பெற்றோர்கள் தங்களுடைய உள்ளூர் என்ஹெச்எஸ் (NHS) இங்கிலாந்து பொது சுகாதார ஆணையக் குழுவிடமிருந்து பெறலாம். விவரங்களை இந்த வலைத்தளத்தில் காணலாம்:

www.england.nhs.uk/about/regional-area-teams.

## தடுப்பு மருந்து எப்படிக் கொடுக்கப்படும்?

பெரும்பாலான குழந்தைகளுக்கு, இது ஒரு நாசி தெளிப்புமருந்தாக வழங்கப்படுகிறது.

## தடுப்பு மருந்து ஃப்ளுவை ஏற்படுத்துமா?

இல்லை, தடுப்புமருந்து ஃப்ளுவை ஏற்படுத்தாது. ஏனெனில் அது நிகழாமல் தடுப்பதற்காக அதிலுள்ள வைரஸ் வலுவிழக்கச் செய்யப்பட்டுள்ளது.

## நாசித் தெளிப்பு மருந்து எவ்வாறு செயல்படுகிறது?



நாசித் தெளிப்பு மருந்து ஃப்ளு ஏற்படாமல் தடுக்கப் பலவீனப்படுத்தப்பட்ட, ஆனால் உங்கள் குழந்தையின் நோய் எதிர்ப்பு சக்தியை வளர்த்துக்கொள்ள உதவக்கூடிய வைரஸ்களைக் கொண்டுள்ளது. உங்கள் குழந்தை இத்தகைய ஃப்ளு வைரஸ்களின் பாதிப்புக்கு ஆளாகும்போது நோய்த் தடுப்பு மண்டலத்தை அந்த நோய்த்தொற்றுக்கு எதிராகப் போராட வைக்க இது உதவுகிறது. இந்தத் தடுப்பு மருந்து மூக்கினால் விரைவாக உறிஞ்சப்படுகிறது, எனவே நாசியில் தெளிப்பு மருந்து கொடுக்கப்பட்டவுடன் உங்கள் குழந்தை தும்மினாலும் கூட, அது வேலை செய்யாமல் போய்விடுமோ என்று நீங்கள் பயப்படத் தேவையில்லை.



ஃப்ளுவில் இருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாத்தல் – பெற்றோர் மற்றும் பேணுநர்களுக்கான தகவல்

## தடுப்புமருந்தினால் ஏதாவது பக்கவிளைவுகள் ஏற்படுமா?

குழந்தைகளுக்கு மூக்கு ஒழுகல் அல்லது மூக்கடைப்பு, தலைவலி, பொதுவான களைப்பு மற்றும் சிறிது பசியின்மை ஆகியவை ஏற்படக்கூடும். ஆயினும், இவை ஃப்ளு ஏற்படுவதால் அல்லது ஃப்ளு தொடர்பான சிக்கல்களால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளை விட மிகவும் தீவிரம் குறைந்தவையாகும். வழக்கத்துக்கு மாறாக கடுமையான பக்க விளைவுகள் ஏற்படாது.

## எனது குழந்தை ஏதேனும் உடல்நலக் கோளாறு கொண்டிருந்தால் என்ன செய்வது?

குறிப்பிட்ட உடல்நல கோளாறுகளைக் கொண்டுள்ள குழந்தைகள், அவை நன்கு சமாளிக்கக்கூடியவையாக இருந்தாலும் கூட, அவர்களுக்கு ஃப்ளு வந்தால் அவர்கள் கடுமையான சிக்கல்களால் பாதிக்கப்படுவதற்கான ஆபத்து அதிகம். இந்தக் குழந்தைகளுக்கு தடுப்பூசி போடுவது மிகவும் முக்கியமாகும்.

இந்தக் கோளாறுகளில் இவை உள்ளடங்கும்:

- கடுமையான சுவாசப் பிரச்சனைகள், உதாரணமாக, வழக்கமான உள்ளிழுக்கும் அல்லது வாய்வழி ஸ்டீராய்டுகள் தேவைப்படுகின்ற கடுமையான ஆஸ்துமா
- தீவிரமான இதயக் கோளாறு
- கடுமையான சிறுநீரக அல்லது கல்லீரல் நோய்
- நீரிழிவு நோய்
- கற்றல் குறைபாடு
- நோய் அல்லது சிகிச்சை காரணமாக ஏற்படும் நோய்த்தடுப்பாற்றல் ஒடுக்கம். உதாரணமாக, புற்றுநோய்க்கு தரப்படும் கீமோ சிகிச்சை அல்லது கதிரியக்கச் சிகிச்சை அல்லது
  நீண்டகால ஸ்டீராய்டு பயன்பாடு போன்றவை
- சிக்கில் செல் அல்லது செலியாக் நோய் காரணமாக மண்ணீரல் அகற்றப்படுதல் (ஏஸ்பிளீனியா) அல்லது சரியாகச் செயல்படாததால் ஏற்படுகின்ற மண்ணீரல் பிரச்சனைகள்
- நரம்பு மண்டலத்தைப் பாதிக்கின்ற பெருமூளை வாதம் போன்ற சிக்கலை உங்கள் குழந்தை பெற்றிருந்தால், உங்கள் குழந்தைக்குத் தடுப்பு மருந்து கொடுக்குமாறு உங்கள் ஜிபி பரிந்துரைக்கலாம்.

* தற்போதைய ஃப்ளு பருவத்தில் 31 ஆகஸ்டு அன்று இரண்டு அல்லது மூன்று வயது ஆகியிருந்தால் உங்கள் குழந்தையும் தகுதிபெறும்

இந்தக் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் ஃப்ளு தடுப்புமருந்து கொடுக்கப்பட வேண்டும். இவர்களில் பெரும்பாலானோருக்கு நாசித் தெளிப்பு மருந்து கொடுக்கப்படும், ஆனால் இரண்டு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அதைக் கொடுக்கக் கூடாது.

இந்தக் குழந்தைகளுக்கும், மருத்துவக் காரணங்களுக்காக நாசி தெளிப்பு மருந்து கொடுக்கப்படக் கூடாதவர்களுக்கு, ஃப்ளு தடுப்புமருந்து ஊசி மூலம் ஏற்றப்படும்.

பக்கம் 7-இல் பட்டியலிடப்பட்டுள்ள மருத்துவக் கோளாறுகள் எதையாவது உங்கள் குழந்தை பெற்றிருந்து, பள்ளியில் தடுப்புமருந்து கொடுக்கப்படவில்லை எனில், நீங்கள் உடனடியாக உங்கள் ஜிபியை(பொது மருத்துவர்) பார்ப்பதற்கு அப்பாயின்ட்மென்ட் பெற வேண்டியது முக்கியம்.

உங்கள் குழந்தைக்கு ஃப்ளு தடுப்புமருந்து தேவைப்படுகிறதா என்பதைப் பற்றி உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால் அல்லது உங்களுக்கு இன்னும் அதிக ஆலோசனை தேவைப்பட்டால், உங்கள் பயிற்சி செவிலியர், ஜிபி (பொது மருத்துவர்) அல்லது சுகாதாரப் பார்வையாளரிடம் பேசுங்கள்.

## தடுப்பு மருந்து எப்போது கொடுக்கப்படும்?

இரண்டு மற்றும் மூன்று வயதுள்ள குழந்தைகளுக்கு, குளிர்காலத்திற்கு முன்பாகத் தடுப்பு மருந்து கொடுப்பதற்கான அழைப்பை உங்கள் ஜிபி சர்ஜரியில் பெறுவீர்கள். நவம்பர் தொடக்கம் வரை உங்கள் ஜிபியிடம் (பொது மருத்துவர்) இருந்து உங்களுக்குத் தகவல் எதுவும் வரவில்லை என்றால், அவர்களை நேரடியாக அழைத்து அப்பாயின்ட்மென்ட் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆரம்பப்பள்ளி குழந்தைகளுக்கும் நடுநிலைப்பள்ளியில் 7ஆம் வருடத்தில் உள்ள குழந்தைகளுக்கும், இலையுதிர் காலத்தில் பள்ளியில் ஒரு தடுப்பு மருந்து அமர்வு நடத்தப்படும். உங்கள் உள்ளூர் உடல்நலக் கவனிப்புக்குழு பள்ளி வாயிலாக உங்களைத் தொடர்பு கொள்ளும்.

உங்கள் குழந்தை ஆரம்பப் பள்ளியில் படித்து, ஃப்ளு ஏற்படுவதற்கான ஆபத்து அதிகமுள்ள ஒரு உடல்நிலையை பெற்றிருந்தால் (பக்கம் 7-ஐப் பார்க்கவும்), பள்ளி தடுப்பூசி அமர்வு வரை நீங்கள் காத்திருக்க விரும்பாவிட்டால் அல்லது இதைச் செய்ய வேண்டும் என நீங்கள் விரும்பினால் தடுப்பு மருந்து வழங்குமாறு நீங்கள் உங்கள் ஜிபியை (பொது மருத்துவர்) கேட்டுக்கொள்ளலாம்.



ஃப்ளுவில் இருந்து உங்கள் குழந்தையைப் பாதுகாத்தல் – பெற்றோர் மற்றும் பேணுநர்களுக்கான தகவல்

## நாசித் தடுப்பு மருந்து பெறக்கூடாத மற்ற குழந்தைகள் யாராவது இருக்கிறார்களா?

உடல்நலக் குறைவால் ஏற்கனவே பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் ஃப்ளு காரணமாக ஏற்படும் சிக்கல்களால் அதிகம் பாதிக்கப்படக்கூடும். எனவே அவர்களுக்குத் தடுப்பு மருந்து கொடுக்க வேண்டியது மிகவும் முக்கியம். பின்வரும் கோளாறுகளைக் கொண்டுள்ள குழந்தைகள் நாசித் தடுப்பு மருந்து எடுத்துக்கொள்ள முடியாது:

- தற்போது மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டுள்ளவர்கள் அல்லது கடந்த 72 மணிநேரத்துக்குள் மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டவர்கள் (பாதுகாப்பில் தாமதம் ஏற்படுவதைத் தடுக்க அவர்களுக்கு பொருத்தமான ஃப்ளு தடுப்பூசி போடப்பட வேண்டும்)
- 
  – ஆஸ்துமா அல்லது
  – முட்டை ஒவ்வாமை ஆம்பிலாக்சிஸ் காரணமாக தீவிர சிகிச்சை தேவைப்படுபவர்கள்

(இந்த இரண்டு குழுக்களில் உள்ள குழந்தைகள் தங்கள் வல்லுநரின் அறிவுரையைக் கோருமாறு பரிந்துரைக்கப்படுகிறது, மற்றும் அவர்கள் மருத்துவமனையில் நாசித் தடுப்பு மருந்து பெற்றுக்கொள்ள வேண்டியிருக்கலாம்)

- அவர்களுடைய நோய்த்தடுப்பு மண்டலத்தைக் கடுமையாகப் பலவீனமடையச் செய்கின்ற ஒரு கோளாறு, அல்லது சிகிச்சையைப் பெற்றுள்ளவர்கள், அல்லது நோய்த்தடுப்பாற்றல் ஒடுக்கத்தால் கடுமையாகப் பாதிக்கப்பட்டதன் காரணமாக தனிமைப்படுத்தப்பட வேண்டியவர்களைக் குடும்பத்தில் கொண்டிருப்பவர்கள்
- தடுப்பு மருந்தின் வேறு ஏதாவது பகுதிப் பொருட்களுக்கு ஒவ்வாமை கொண்டிருப்பவர்கள்*



* நோய்த் தடுப்பு மருந்தின் பகுதிப்பொருட்களின் பட்டியலைத் தெரிந்துகொள்ள www.medicines.org.uk/emc/product/3296/pilஎன்ற வலைத்தளத்தைப் பார்வையிடுங்கள்

உங்கள் குழந்தை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவக் கோளாறுகளால் அல்லது சிகிச்சைகளால், ஃப்ளூ ஏற்படுவதற்கான அதிக ஆபத்தைப் பெற்றிருந்து நாசியில் தெளிக்கப்படும் தடுப்பு மருந்தைப் பெறவில்லை எனில், அவர்களுக்கு ஃப்ளூ தடுப்பூசி போட வேண்டும்.

உங்கள் குழந்தைக்குத் தடுப்பு மருந்தை ஊசியாகவா அல்லது நாசி மூலம் தரவேண்டுமா என உங்களுக்கு உறுதியாகத் தெரியாவிட்டால், தயவுசெய்து உங்கள் பள்ளியின் நோய்த்தடுப்புக் குழுவிடம் அல்லது செவிலியரிடம் அல்லது உங்கள் சர்ஜரியில் உள்ள ஜிபியிடம் (பொது மருத்துவர்) கேளுங்கள்.

நாசித் தெளிப்பு மருந்து மூலம் நோய்த்தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட குழந்தைகள், தடுப்பு மருந்து கொடுக்கப்பட்ட சுமார் இரண்டு வாரங்களுக்கு குடும்பத்தில் மிகவும் கடுமையாக பலவீனமான நோய் எதிர்ப்பு அமைப்பு கொண்டவர்களுடன் தொடர்பு கொள்வதைத் தவிர்க்க வேண்டும்.

## மற்ற தடுப்பூசிகள் போடும் போதே எனது குழந்தைக்கு ஃப்ளூ தடுப்புமருந்தும் கொடுக்கலாமா?

ஆம். மற்ற வழக்கமான குழந்தைப்பருவத் தடுப்பூசிகள் போடும் அதே நேரத்தில் ஃப்ளூ தடுப்பு மருந்தும் கொடுக்கலாம். உங்கள் குழந்தைக்குக் காய்ச்சல் இருந்தால் தடுப்பு மருந்து கொடுப்பதைச் சற்று தாமதிக்கலாம். மேலும், குழந்தைக்கு மூக்கடைப்பு அல்லது மூக்கு ஒழுகல் இருந்தால், அது நோய்த் தடுப்பு மருந்து அவர்களுடைய உறுப்பு மண்டலத்துக்குள் செல்வதை தடுத்துவிடக்கூடும். இவ்வாறான நிகழ்வில், அவர்களுடைய நாசி அறிகுறிகள் குணமடையும் வரை அவர்களுக்கு தடுப்பு மருந்து கொடுப்பதை ஒத்திப்போடலாம்.







## நாசித் தடுப்பு மருந்து பன்றிகளிலிருந்து பெறப்பட்ட ஜெலட்டினை (போர்சின் ஜெலட்டின்) கொண்டுள்ளதா?

ஆம். நாசித் தடுப்பு மருந்து பலவகையான அத்தியாவசிய மருந்துகளில் பயன்படுத்தப்படுகின்ற, மிகவும் பதப்படுத்தப்பட்ட ஜெலட்டின் வடிவத்தைக் (போர்சின் ஜெலட்டின்) கொண்டிருக்கிறது. இந்த ஜெலட்டின் தடுப்பு மருந்து வைரஸ்களை நிலையானதாக வைத்திருக்க உதவி செய்கிறது, அதன் மூலம் தடுப்பு மருந்து ஃப்ளூவுக்கு எதிராக மிகச்சிறந்த பாதுகாப்பை வழங்குகிறது.

தடுப்பு மருந்து நாசி தெளிப்பு மூலமாகக் குழந்தைகளுக்கு கொடுக்கபடுகிறது. ஊசி மூலம் செலுத்தப்படுவதை விடவும் இது செயல்திறன் கொண்டுள்ளதாக அறியப்படுகிறது. இதற்கு காரணம் இது கொடுப்பதற்கு எளிதாகவும், ஃப்ளூ தொற்று ஏற்படும் நிலை கொண்ட மற்றவர்களுக்கு தொற்று ஏற்படும் வாய்ப்பை குறைப்பதிலும் செயல்திறன் கொண்டதாக உள்ளது.

ஆயினும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மருத்துவக் காரணங்களால் அல்லது சிகிச்சைகளால் உங்கள் குழந்தைக்கு ஃப்ளூ வரும் ஆபத்து அதிகம் இருந்து நாசி ஃப்ளூ தடுப்புமருந்து எடுத்துக்கொள்ளாமல் இருந்தால், அவர்களுக்கு ஊசி மூலம் ஃப்ளூ தடுப்புமருந்து கொடுக்கப்பட வேண்டும்.

சில சமயக் குழுக்கள் மருத்துவத் தயாரிப்புகளில் பன்றி ஜெலட்டின் பயன்படுத்தப்படுவதை ஏற்றுக்கொள்கின்றன - ஆனால் முடிவு, நிச்சயமாக உங்களுடையது தான்.

## கூடுதல் தகவல்களை நான் எங்கு பெற முடியும்?

கூடுதல் தகவல்களைத் தெரிந்துகொள்ள www.nhs.uk/child-flu -ஐப் பார்வையிடுங்கள். உங்களுக்கு மேற்கொண்டு ஏதாவது கேள்விகள் இருந்தால், உங்கள் ஜிபி (பொது மருத்துவர்), பயிற்சி செவிலியர், உங்கள் குழந்தையின் பள்ளிச் செவிலியர் அல்லது உங்கள் சுகாதாரப் பார்வையாளர் ஆகியோரிடம் பேசுங்கள்.



**www.nhs.uk/child-flu**

© Crown copyright 2020
2902552C1 4.5M 1P JULY 2020 (APS)
First published June 2015